

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only




To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**
Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852



## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 04.04.2025 | Friday | 4.00 pm | Holy Mass | Kurusumalai |
| 05.04.2025 | Saturday | 10.00 am | School Day - HOM | Kuzhithurai |
| 06.04.2025 | Sunday | 7.00 am | Holy Mass | Alwarkoil |
| | | 3.30 pm | MCYM - Year Plan Inauguration | Erachakulam |
| 07.04.2025 | Monday | | Pathayathra - Mar Ephraem Day | Vellelumbu |
| 08.04.2025 | Tuesday | 6.30 am | Holy Mass - Mar Ephraem Day | Cathedral |
| | | 10.00 am | Monthly Recollection for Priest | Bishop's House |
| 11.04.2025 | Friday | 5.00 pm | Way of the Cross | Erachakulam |
| 13.04.2025 | Sunday | 7.30 am | Holy Mass - Palm Sunday | Cathedral |
| 17.04.2025 | Thursday | | Holy Thursday | Mecode |
| 18.04.2025 | Friday | | Good Friday | Koikalthoppu |
| 19.04.2025 | Saturday | 7.30 pm | Easter Mass | Koikalthoppu |
| 20.04.2025 | Sunday | | Easter Program - UCC | Melpuram |
| 23.04.2025 | Wednesday | 11.00 am | House Blessing | Pushpagiri |
| 24.04.2025 | Thursday | | Labour Commission Meeting | Chennai |
| 25.04.2025 | Friday | | Preaching - Divine Mercy Retreat Centre | Elavoor |
| 26.04.2025 | Saturday | | Priestly Ordination | Mariagiri |
| 27.04.2025 | Sunday | 9.30 am | First Mass | Mariagiri |
| | | | ,, | Manjathoppu |
| | | | ,, | Adhichavilagam |
| | | | ,, | Pinkulam |
| | | | ,, | Panachamoodu |
| 28.04.2025 | Monday | | First Mass | Mathar |
| 30.04.2025 | Wednesday | 3.00 pm | Nithi Ltd. Meeting | Bishop's House |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 ஏப்ரல் 2025 இதழ். 4



***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*





மலர். 22 மார்ச் 2025 இதழ். 3


**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




rawpixel

# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam




மலர்.22 ஏப்ரல் 2025 இதழ்.4

**முக்கியமான நாட்கள்**

**ஏப்ரல் 2025**

- 02 உலக ஆட்டிசம் விழிப்புணர்வு தினம்
- 05 வழக்கறிஞர்கள் தினம்
- 10 காவல் தினம்
- 15 உலக கலை தினம்
- 16 உலக வாழைப்பழ தினம்
- 20 ஈஸ்டர்
- 22 பூமி தினம்
- 23 உலக புத்தக தினம்
- 25 உலக மலேரியா தினம்
- 21 உலக விமானிகள் தினம்
- 29 உலக நடன தினம்
- 30 நேர்மை தினம்

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | Circulars | 3-5 |
| 2. | குருக்கள் இல்ல ஆலய அர்ச்சிப்பு | 6 |
| 3. | குருமட செய்திகள் | 6 |
| 4. | சுவிசேஷ சங்கம் | 6 |
| 5. | திருத்துயக பணியாளர்களுக்கான கூடுகை | 7 |
| 6. | மறைமாவட்ட குருக்களின் தொடர் உருவாக்கப் பயிற்சி | 7 |
| 7. | பெயர்விழா நல்வாழ்த்துக்கள் | 8 |
| 8. | MIDS | 9 |
| 9. | MCA | 13 |
| 10. | திருமண ஆயத்தப்பயிற்சி | 13 |
| 11. | Health for One Million (Hom) | 14 |
| 12. | மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி | 15 |
| 13. | மறைவட்ட செய்திகள் | 16 |
| 14. | ஆயரின் மார்ச் மாத நிகழ்வுகள் | 17 |
| 15. | இம்மாதம் நினைவு கூர | 19 |
| 16. | Bishop's Diary | 20 |


Printed by
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



**Most Rev. Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir. No. 3/2025

01.04.2025

## CIRCULAR

**ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்களும் வணக்கங்களும்...**

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே / அருட்சகோதரர்களே அருட்கன்னியர்களே / இறைமக்களே,***

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவிற்கு தயாராகும் இத்தருணத்தில் நமது மறைமாவட்டத்தின் முதல் ஆயராகிய மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு திருநாளை இந்த மாதம் 7, 8 தினங்களில் கொண்டாடுகின்றோம். அவரது வாழ்வும் பணியும் திருச்சபைக்கும் சமூகத்திற்கும் ஒரு உந்து சக்தியாக அமைந்துள்ளது. அவரது நினைவு திருநாளில் அவரது படிப்பினைகளை உள்வாங்கி வாழ்க்கை பாடத்தை கற்றறிந்து அதிலிருந்து தூண்டுதல் பெற்று நமது வாழ்க்கை பயணத்தை தொடர்வோம். அவரது ஆன்மீக வாழ்வு இன்றைய தலைமுறைக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது. அவரது மறைதூதுப் பணி தாகம் கிறிஸ்துவின் அன்பையும், மீட்பையும் புதிய மறைபரப்பு தளங்களுக்கு எடுத்து செல்ல நம்மை அழைக்கிறது. அவரது ஆரோக்கிய பார்வை புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் துன்புறும் மனிதருக்கு உதவிட அழைக்கிறது. இன்று நிலவி வரும் போதை கலாசாரத்தில் போதையற்ற ஒரு வாழ்விற்கு அவரது வாழ்வு நம்மை தூண்டுகிறது. கைவிடப்பட்ட நிலையிலிருக்கும் முதியோர்களையும், பிள்ளைகளையும், இளையோர் களையும் கரம்கொடுத்து மனித நேய மாண்பு காக்க அவர் செய்த அன்பு பணிகள் நம்மை அழைக்கிறது. கிறிஸ்தவ நம்பிக்கையை சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கு எடுத்துச் செல்ல அவர் காட்டிய துணிவு அவர்

ஆண்டவர் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறது. இறையியலையும் சமூக பிரச்சனைகளையும் ஆழ்மனதியானத்திற்கு உட்படுத்தி திருச்சபைக்கு பணிவும் சமூக சீர்திருத்தத்தில் துணிவும் காட்டினார். அவரது அர்ப்பண வாழ்வு மற்றும் போதனைகள் இன்றைய சமூகத்திற்கு ஆன்மீக வழிகாட்டுதலை தருகிறது. அவருடைய நினைவு திருநாள் அவர் வாழ்ந்து காட்டிய மதிப்பீடுகளை நம் உள்ளங்களில் தூண்டி எழுப்புகிறது. அவர் ஊக்குவித்த பிறரன்பு பணிகளும், சமூக நல்லிணக்க முயற்சிகளும், திருச்சபையில் அவர் மேற்கொண்ட முயற்சிகளும் நம் உள்ளங்களில் அவருக்கு நீங்க இடத்தை தந்திருக்கிறது. அவருடைய நினைவுக்கு முன் தலைவணங்கி அஞ்சலி செலுத்துவோம்.

நம் பேராலயத்தில் அமைந்திருக்கும் அவரது கல்லறைக்கு பாதையாத்திரையாக வந்து அஞ்சலி செலுத்தி அவரது ஜெப உதவியையும் நாடுவோம். விடுதலை பயண தொடக்கத்தில் குறிப்பாக பாலைநில பயணத்தில் யோசேப்பின் எலும்புகளை மோசே தம்மோடு எடுத்து சென்றார். பகலில் மேக தூணும் இரவில் நெருப்பு தூணும் வாயிலாக கடவுள் இஸ்ராயேல் மக்களை வழிநடத்தினார். "ஏனெனில் கடவுள் உங்களை சந்திக்கும் போது இங்கிருந்து என் எலும்புகளை எடுத்துச் செல்லுங்கள் என்று யோசேப்பு இஸ்ராயேல் மக்களிடம் கூறினார்" (விப 13:19). எதிர்நோக்கின் திருப்பயணிகளாக வாழ்க்கை பயணத்தை தொடரும் நாம் கடவுளின் அன்பிரக்கத்தையும் அருளையும் அனுபவமாக்கிக் கொண்டிருக்கின்றோம். மேதகு ஆயர் அவர்களின் கல்லறை அவர் நம்முடன் இருந்து நமக்காக இறைவனிடம் மன்றாடுகின்றார் என்பதை நினைவூட்டுகிறது. அவரது பரிந்துரை நமக்கு அரணாகவும் கோட்டையாகவும் இருக்கட்டும். அவரது நினைவு அனைவருக்கும் ஆசீராக மாறட்டும். ஏப்ரல் 7-ஆம் தியதி நடைபெறும் பாதயாத்திரையிலும், 8-ஆம் தியதி நடைபெறும் நினைவு திருப்பலியிலும் அனைவரும் கலந்து கொண்டு இறையாசீர் பெற்று செல்ல அனைவரையும் அழைக்கின்றேன்.



## நிகழ்வன

### 07-04-2025 திங்கள்கிழமை


| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | காலை ஜெபம், திருப்பலி<br>மார் எஃப்ரேம் நகர் (வெள்ளெலும்பு ஆலயம்) |
| காலை 9.30 மணி | : | தூப மன்றாட்டு - பின்குளம் |
| காலை 9.45 மணி | : | பாதையாத்திரை ஆரம்பம் |
| காலை 10.15 மணி | : | குழிஞ்ஞான்விளை |
| காலை 10.30 மணி | : | ஊரம்பு |
| காலை 10.45 மணி | : | சூழால் |
| காலை 11.00 மணி | : | புஷ்பகிரி சந்திப்பு |
| காலை 11.15 மணி | : | அம்பிலிகோணம் |
| காலை 11.30 மணி | : | அடைக்காகுழி சந்திப்பு |
| நண்பகல் 12.00 மணி | : | செறுவாரக்கோணம் |
| நண்பகல் 12.30 மணி | : | களியக்காவிளை |
| பிற்பகல் 12.45 மணி | : | படந்தாலுமூடு |
| பிற்பகல் 01.15 மணி | : | குழித்துறை மார் எஃப்ரேம் வளாகம்<br>(மதிய உணவு) |
| மாலை 04.15 மணி | : | பாதையாத்திரை தொடர்தல் |
| மாலை 04.30 மணி | : | வெட்டுமணி |
| மாலை 05.00 மணி | : | பேராலயம்<br>(ஆயரின் நினைவிடம் சென்றடைதல்)<br>மாலை ஜெபம், தூப மன்றாட்டு |
| தலைமை | : | மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் |

### 08-04-2025 செவ்வாய்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணி | : | காலை ஜெபம் |
| காலை 7.00 மணி | : | நினைவுத் திருப்பலி |
| | : | பொதுக்கூட்டம் |
| | : | தூப மன்றாட்டு |

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*



**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# குருக்கள் இல்ல ஆலய அர்ச்சிப்பு

கழுவன்திட்டையில் புனித ஜாண் மரிய வியானி குருக்கள் இல்லத்தின் கட்டுமான பணிகள் அனைத்தும் முடிந்த நிலையில், இல்லத்தில் உள்ள சிற்றாலயத்தின் ஆசிர்வாதமானது, மார்ச் 18, 2025 அன்று நடைபெற்றது. இவ்வாசீர்வாத நிகழ்வில மறைமாவட்ட உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# குருமட செய்திகள்

- ❖ இளங்குருமட அருட்சகோதரர்களுக்கான வருடாந்திர தேர்வு மார்ச் மாதம் 17 முதல் 28 வரையிலான நாட்களில் நடைபெற்றது. அருட்கோதரர்கள் தங்கள் தேர்வுகளை முடித்து மார்ச் மாதம் 28-ம் நாள் கோடை விடுமுறைக்காக தங்கள் இல்லங்களுக்கு சென்றனர்.
- ❖ உயர்குருமட அருட்சகோதரர்கள் தங்கள் இக்கல்வியாண்டின் வகுப்புக்களை நிறைவு செய்து விடுமுறைக்காக மறைமாவட்டம் திரும்பினர்.

# சுவிசேஷ சங்கம்

மறைமாவட்ட அளவிலான நற்செய்தி சங்க வகுப்பானது இந்த மாதம் 8 மற்றும் 9 ஆகிய நாட்களில் மரியகிரி ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை பெனடிக்ட் OIC மற்றும் அருள் சகோதரி மேரி பிரசாத் அவர்களால் வகுப்புகள் நடத்தப்பட்டது.



# திருத்தூயக பணியாளர்களுக்கான கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் தூயக பணியாளர்களுக்கான கூடுகை மார்ச் மாதம் 9-ம் தேதி அந்தந்த மறைவட்டங்களில் வைத்து நடத்தப்பட்டது. திருத்தொண்டர்கள், களப்பணியாளர்கள் ஆகியோரின் தலைமையில் கூடுகைகள் நடத்தப்பட்டன இக்கூடுகை தூயக பணியாளர்களில் ஆராதனைகளின் முக்கியத்துவத்தையும் அவற்றில் அவர்களின் பங்காளிப்பையும் ஒழுங்குமுறைகளையும் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்தது. அத்தோடு இறையழைத்தலின் மேன்மையை பறைசாற்றி தூயகப்பணியாளர்களின் உள்ளங்களில் இறையழைத்தல் என்னும் விதையை விதைத்த கூடுகையாகவும் அமைந்தது.

# மறைமாவட்ட குருக்களின் தொடர் உருவாக்கப் பயிற்சி

மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கான Ongoing Formation Programme "ENHANCING LEADERSHIP AND PSYCHOLOGICAL WELLNESS" என்ற சிந்தனையில் மார்ச் மாதம் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் ஆயர் இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த வகுப்புகளை அருட்தந்தை. ஹூர்து வில்சன் (Diocese of Thoothukudi) அவர்கள் வழிநடத்தினார்கள். இவ்வகுப்பில் ஏப்ரல், 2010-ம் ஆண்டிற்கு முன் குருத்துவ அருள் பொழிவு பெற்றவர்கள் வரை கலந்துகொண்டார்கள்.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை ரதீஷ் ரிச்சார்ட்
ஏப்ரல் 03



அருட்தந்தை செலஸ்டின்
ஏப்ரல் 06



பேரருட்தந்தை S. வர்கீஸ்
ஏப்ரல் 23



அருட்தந்தை G. வர்கீஸ்
ஏப்ரல் 23



அருட்தந்தை ஜார்ஜ் தாவரத்தில்
ஏப்ரல் 23



அருட்தந்தை G. ஜீவின் ஜார்ஜ்
ஏப்ரல் 23



அருட்தந்தை வில்பின் விஜு
ஏப்ரல் 23



அருட்தந்தை பீட்டர் ஆனந்த்
ஏப்ரல் 29



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## மகளிர் தின விழா

அகில உலக பெண்கள் தினம் ஆண்டு தோறும் மார்ச் 8ம் தியதி கொண்டாடப்பட்டு வருகின்றது. மிட்ஸ் நிறுவனமானது 08.03.2025 அன்று நாவல்காடு மலங்கரை கத்தோ◌க்க ஆலய சமூக நல கூடத்தில் வைத்து “பாலின சமத்துவ செயல்பாடுகளை துரிதப்படுத்துவோம்” என்னும் கருப்பொருளை மையமாக வைத்து பெண்கள் தின விழாவை சிறப்பித்தது. விழாவானது காலை 10.30 மணிக்கு மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. விழாவில் மண்டல இயக்குநர்கள் அருட்தந்தை பிபின், அருட்தந்தை சுனீஷ் குமார் மற்றும் திருமதி கிருஷ்ணகுமாரி, (முன்னாள் பஞ்சாயத்து தலைவி, ஈசாந்திமங்கலம்) வழக்கறிஞர் திருமதி எம்லின் பெலின்டா, திரு. சசிக்குமார் (கேரள மலையாளிகள் சங்க தலைவர்) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் விழாவினை துவங்கி வைத்து துவக்கவுரையாற்றினார்கள். தொடர்ந்து திருமதி கிருஷ்ணகுமாரி அவர்கள் பெண்களின் சிறப்புகளை கூறி பெண்களை வாழ்த்தினார்கள். வழக்கறிஞர் எம்லின் பெலின்டா அவர்கள் பெண்கள் எவ்வாறு தைரியத்துடனும் மன உறுதியுடனும் வாழ வேண்டும என்றும் பெண்களுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் வரும் போது அதை எவ்வாறு துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்றும் விளக்கி கூறி பெண்களை ஊக்கப்படுத்தினார்கள். பின்னர் தங்களுடைய சுய முயற்சியால் தன்னார்வத்தோடு முன்வந்து சமூகப்பணி செய்து வரும் திருமதி. அனிதா மற்றும் திருமதி ஷீபா ஆகியோருக்கு மனிதநேய தன்னார்வலர் விருதும் தென்னை மரம்

ஏறும் பணி செய்து வரும் திருமதி விஜயகுமாரி அவர்களுக்கு துணிச்சல்மிகு கடின உழைப்பாளர் விருதும் வழங்கப்பட்டு விழா மேடையில் கவுரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து திரு.சசிகுமார் மற்றும் அவரது குழுவினரால் பெண்களின் உடல்நலத்தை பேணும் பயனுள்ள பொருட்களை குறித்தும்;, அவை உடல்நலத்தை எவ்வாறு காக்கின்றன என்ற செய்முறை விளக்கங்களும் கொடுக்கப்பட்டன. இறுதியில் தேசிய கீதத்துடன் விழா நிறைவு பெற்றது.

**மூலிகை மருந்து தயாரிக்கும் பயிற்சி**

நம் முன்னோர்கள் மூலிகைகளை பயன்படுத்தி தயாரித்த மருந்துகள் பலவும் இன்றும் அழியாமல் நமக்கு நன்மை பயக்கின்றன. அவற்றுள் ஒன்று தான் காயதிருமேனி தைலம். இந்த தைலத்தை தயாரிக்கும் முறையை தற்போதைய தலைமுறையினரும் அறிந்து பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் 10.02.2025 முதல் 28.02.2025 வரை இரண்டு கட்டங்களாக மூலிகை மருந்து (காயத்திருமேனி தைலம்) தயாரிக்கும் பயிற்சியானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. பயிற்சியினை மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் துவங்கி வைத்தார்கள். திரு. ஜூலியஸ் பாண்டியன் மற்றும் வைத்தியர் திரு. குணசீலன் ஆகியோர் பயிற்சியினை நடத்தினர். பயிற்சியில் தைலம் தயாரிக்க தேவைப்படும் மூலிகைகள், அவை கிடைக்கும் பகுதிகள் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் மூலிகை சேகரிப்பு, தைலம் தயாரிக்கும் விதம் ஆகியவை செய்முறை விளக்கங்களுடன் பயிற்சியளிக்கப் பட்டது. தயாரிக்கப்பட்ட தைலமானது, பெதஸ்தா காயதிருமேனி தைலம் என்று பெயரிடப்பட்டு 07.03.2025 அன்று மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் திரு. ஜூலியஸ் பாண்டியன், வைத்தியர் திரு. குணசீலன், மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் பயிற்சி பெற்றவர்கள் முன்னிலையில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பயிற்சியில் கலந்து கொண்ட 30



நபர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் காயதிருமேனி தைலம் ஆகியவை வழங்கப்பட்டது. தொடர்ந்து மிட்ஸ் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்ட மூலிகை தோட்டமானது ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**உதவித்திட்டங்கள்**

06.03.2025 அன்று *All for Life Life for All* திட்டத்தின் வழியாக அகஸ்தீஸ்வரம் மற்றும் மந்தாரம்புதூர் கிளஸ்டர்களில் உள்ள 17 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு சிறு தொழில்கள் செய்வதற்காக ஒரு உறுப்பினருக்கு ரூபாய் 10,000/- வீதம் மொத்தம் ரூபாய் 1,70,000/- வழங்கப்பட்டது.

மிட்ஸ் மரியன் இயக்க பயனாளிகளுக்கு மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் 12.03.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வருமானம் ஈட்டும் சிறு தொழில்கள் செய்ய கடனுதவி வழங்கப்பட்டது. ஒரு பயனாளிக்கு ரூபாய் 20,000/- வீதம் 126 பயனாளிகளுக்கு மொத்தம் 25,20,000/- வழங்கப்பட்டது.

13.03.2025 அன்று கோல்பிங் சார்பாக மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து கடனுதவிகள் வழங்கப்பட்டன. 49 கோல்பிங் குடும்பங்களுக்கு கக்கறா கடனாக 2,38,50,000/- ரூபாயும், வருமானம் ஈட்டும் சிறு தொழில்கள் செய்ய 18 உறுப்பினர்களுக்கு 18,00,000/- ரூபாயும், மற்றும் சிறப்பு கடனுதவியாக 5 உறுப்பினர்களுக்கு 2,00,000/- ரூபாயும் வழங்கப்பட்டது.

14.03.2025 அன்று மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து உயர்கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கான கடனுதவிகள் வழங்கப்பட்டன. Mandy Pickering Higher Education Scholarship திட்டத்தின் வழியாக 31 மாணவ மாணவிகளுக்கு 6,20,000/- ரூபாயும், Divine Mercy Higher Education Scholarship திட்டத்தின்

வழியாக 13 மாணவ மாணவிகளுக்கு 3,25,000/- ரூபாயும், MIDS Jubilee Memorial Scholarship திட்டத்தின் வழியாக 22 மாணவ மாணவிகளுக்கு 5,50,000/- ரூபாயும், AASTHI Higher Education Scholarship திட்டத்தின் வழியாக 17 மாணவ மாணவிகளுக்கு 3,40,000/- ரூபாயும் கடனாக வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

நாகப்பட்டினம் கலங்கரை சமூக சேவை மையமானது விதவை பெண்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு பொருளாதார மற்றும் கலாச்சார மேம்பாட்டு திட்டங்களை மிகவும் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. மிட்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் மற்றும் மண்டல இயக்குநர்கள், மிட்ஸ் பணியாளர்கள், மரியன் இயக்க பொறுப்பாளர்கள் என மொத்தம் 14 பேர் இணைந்து 20.02.2025 மற்றும் 21.02.2025 ஆகிய இரண்டு தினங்கள் கலங்கரை சமூக சேவை மையத்தை பார்வையிட்டு அங்கு கைம்பெண்களுக்காக செயல்படுத்தும் திட்டங்களை குறித்து அறிந்து கொண்டனர்.

21.02.2025 அன்று மிட்ஸ் நிறுவனம் மற்றும் சுரேஷ் கண் மருத்துவமனை இணைந்து சின்னத்துறை ஆலய வளாகத்தில் வைத்து இலவச கண் பரிசோதனை முகாமினை நடத்தியது. இந்த முகாமில் சின்னத்துறை, பூத்துறை, தூத்தூர், கிராத்தூர், நம்பாளி, நித்திரவிளை, வள்ளவிளை ஆகிய பகுதிகளை சேர்ந்த 169 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

23.02.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் வழியாக நடைபெறும் மாதாந்திர மிட்ஸ் அறிவு திறன் தேர்வு நாகர்கோவில், ஆற்றூர், மரியகிரி, மிட்ஸ் அலுவலகம் ஆகிய பகுதிகளில் வைத்து நடத்தப்பட்டது. இந்த தேர்வுகளில் மொத்தம் 113 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.



# MCA
## Diocese of Marthandam

❖ மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA-யின் ஆண்டுத்திட்ட வெளியீடு விழா 23.03.2025 அன்று Mar Ivanios CBSE School குழித்துறையில் வைத்து குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிறைட் அவர்களால் நடத்தப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை MCA ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் மற்றும் பொறுப்பாளர்கள் செய்திருந்தனர்.

❖ மேலும் MCA-யின் விண்ணக பாதுகாவலர் புனித சூசையப்பர் திருநாளை முன்னிட்டு 16/03/2025 மற்றும் 23/03/2025 ஆகிய தேதிகளில் பங்குகளில் மூத்த MCA உறுப்பினர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

❖ மேலும் 23/08/2025 அன்று Mar Ivanios CBSE School வைத்து ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் நினைவு கட்டுரைப் போட்டியும் நடத்தப்பட்டது.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 ஏப்ரல்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **11, 12** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆரோக்கிய மேம்பாட்டு அலுவலகம் சார்பாக மார்ச் 12-ம் தியதி பெங்களூரில் நடைபெற்ற சுகாதார கருத்தரங்கில் மார்த்தாண்டம் மறைமாவட்டம் நலவாழ்வு பணிக்குழு செயலரும் HOM இயக்குனருமான அருட்தந்தை அஜீஷ்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

HOM ஆர்கனைசர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கன் தலைமையில் நடைபெற்றது. செயலர் திருமதி புஷ்பலதா அவர்கள் அறிக்கை வாசித்தார்கள். திருமதி செல்வி அவர்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் குறித்த கணக்குகள் வாசித்தார்கள். நான்கு அலகுகளிலும் போதை விழிப்புணர்வு கூட்டாங்கள் நடத்த தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு அலகுகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. பின்னர் அருட்தந்தை அஜீஷ் குமார் ஜெபத்துடன் கூட்டம் முடிவுற்றது.



# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் 13-வது பட்டமளிப்பு விழா 15.03.2005 அன்று நடைபெற்றது. கல்லூரியின் தலைவரும் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயருமான மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் தலைமை தாங்கினார். ஆயர் அவர்களின் தலைவர் உரையில், 'கல்வி அறிவுடைய மக்கள் இருந்தால் அமைதியான சமுதாயம் உருவாகும். அத்துடன், கல்வி அறிவுடன் வாழ்க்கை கல்வியிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் கூறினார். கல்லூரி தாளாளர் அருட்தந்தை சதீஷ் குமார் அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் திதிகாப்பாளர் அருட்தந்தை கெபின் முன்னிலை வகுந்தார். கல்லூரி முதல்வர் முனைவர் லெனின் பிரட் அறிக்கை வாசித்தார். கல்விசார் இயக்குனர் முனைவர் ஆஸ்டின் வாழ்த்திப் பேசினார். சிறப்பு விருந்தினராக நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராபர்ட் புரூஸ் கலந்துக்கொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கிப் பேசுகையில், மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நேரத்தை வீணடிக்காமல் தங்கள் இலக்கை அடையும் குறிக்கோளோடு உழைக்கவேண்டும் என்றுக் கூறினார். விழா ஏற்பாடுகள் அனைத்தும் உதவி பேராசிரியை ஸ்டெபி ஏஞ்சலின் தலைமையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

### மார்த்தாண்டம் மறைவட்ட குருக்களுக்கான தியானம்

மார்த்தாண்டம் மறைவட்ட குருக்களுக்கான தியானம் மார் எப்ரேம் கல்லூரியில் வைத்து 11.3.2023 அன்று நடைபெற்றது. இதில் மறைவட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## நாகர்கோவில் மறைவட்டம்

### மாதாந்திர தியானம் மற்றும் குருக்களுக்கான கூடுகை

நாகர்கோவில் மறைவட்ட மாதாந்திர தியானம் மற்றும் குருக்கள் கூடுகையானது, முக்கடல் சாந்தி ஆசிரமத்தில் வைத்து 10. 3. 2025 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு, மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜான் குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தியான சிந்தனையை, சிலுவைப் பாதையை மையமாக வைத்து அருள்தந்தை ஜெபின் ஜான் அவர்கள் வழிநடத்தினார்கள். தொடர்ந்து குருக்கள் கூடுகையில் மறை வட்டத்தில் வரவிருக்கின்ற நிகழ்வுகளை குறித்தும், அதனுடைய ஒழுங்கமைவுகள் குறித்தும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. கூடுகையின் இடையே மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அவர்கள் வருகை தந்து, ஒரு சில வழிகாட்டுதல்கள் தந்தார்கள்.



# ஆயரின் மார்ச் மாத நிகழ்வுகள்



- 1 ➢ குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்ற வின்சென்ட் தே பவுல் உறுப்பினர்களுக்கான தவக்கால தியானத்தில் தியான உரை வழங்கினார்.
- 2 ➢ மங்காடு புனித ஜார்ஜியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் வழங்கினார்.
- 4 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரை குழு கூடுகைக்குத் தலைமை தாங்கினார்.
- 4 ➢ வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தல திருவிழா திருப்பலியில் மறையுரை ஆற்றினார்.
- 6 ➢ மங்குழி பன்ளிக்கூட ஆண்டு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.
- 7 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குருக்கள் பராமரிப்பு நிதியத்தின் கூடுகைக்குத் தலைமை தாங்கினார்.
- 8 ➢ செங்கல்பட்டு மறைமாவட்ட மகளிர் தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

9 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற மரியாயின் சேனையின் ஆக்ஸேஸ் விழாவில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

10-14 ➢ காதோலிகேட் மையத்தில் வைத்து நடைபெற்ற மலங்கரை ஆயர் மாமன்ற கூடுகையில் கலந்து கொண்டார்.

15 ➢ இலவுவிளை மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு தலைவருரை ஆற்றினார்.

16 ➢ கருமானூர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

18 ➢ கழுவந்திட்டை புனித ஜாண் மரிய வியானி குருக்கள் இல்ல சிற்றாலயத்தை அர்ச்சித்து திருப்பலி நிறைவேற்றினார்.

19 ➢ மேக்கோடு Sisters of St. Joseph of St. Mark துறவற இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் வழங்கினார்.

21-23 ➢ திருச்சி அருங்கொடை தியான இல்லத்தில் மூன்று நாள் தியானத்தை வழிநடத்தினார்.

24-25 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டார்.

25 ➢ நெய்யாற்றங்கரை இலத்தீன் மறைமாவட்டத்தின் ஆயர் - தேர்வு Msgr. செல்வராஜ் அவர்களின் திருநிலைப்பாடு நிகழ்வில் கலந்து கொண்டார்.

27 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற School Board (Aided) Meeting -இல் கலந்து கொண்டார்.

28 ➢ இலவுவிளை மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு தலைவருரை ஆற்றினார்.

30 ➢ கணபதிக்கல் ஆலயத்தில் புனரமைக்கப்பட்ட குருசெடியை அர்ச்சித்து ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் வழங்கினார்.



## இம்மாதம் நினைவு கூர


ஏப்ரல் 2025

06 – சமியோ ஞாயிறு
பெரிய நோன்பின் ஆறாம் ஞாயிறு
08 – லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு
11 – நாற்பதாம் வெள்ளி
12 – லாசரை உயிர்ப்பித்த சனிக்கிழமை
திருதந்தை புனித யூயோஸ்
ஆப்ரஹாம் மார் யூயோஸ் ஆண்டகையின் பெயர்விழா
13 – குருத்து ஞாயிறு (ஓசானா ஞாயிறு)
சமூக வளர்ச்சி தினம்
மார் செறாபியோன்
14 – திருப்பாடுகளின் திங்கள்
மார் செமஊன் பெர்ஸாபோயோ
15 – திருப்பாடுகளின் செவ்வாய்
16 – திருப்பாடுகளின் புதன்
17 – பாஸ்கா வியாழன்
18 – புனித வெள்ளி
19 – புனித சனி
20 – உயிர்ப்புத் திருநாள்
ஹேவோறெ வாரம்
23 – மார் கீவர்கீஸ்
25 – நற்செய்தியாளர் புனித மாற்கு
அனைத்து மௌதியானன்மார்கள்
27 – புது ஞாயிறு
புனித கிளீற்றஸ்
28 – ஐசக் மார் யூஹானோன் ஆண்டகையின் நினைவு
சியன்னா நகரின் புனித கத்தரீனா
30 – செபதேயுவின் மகன் மார் யாக்கோபு

8 

23 

25 

25 

## குருக்கள் இல்ல ஆலய அர்ச்சிப்பு



## Mar Ephraem College




## MIDS




## MCA



## திருத்தூயக பணியாளர்களுக்கான கூடுகை



## Health for One Million

